முச்சந்தி முரளி



"எங்களுக்கு
என்ன தேவையெண்டு
அவையோ
அட்வைஸ்
சொல்லோணும்?"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 279

சனிக்கிழமை
31 ஒகஸ்ட் 2024

ஆவணி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055




## வவுனியாவில் விபத்து; இளைஞர் ஒருவர் இறப்பு

வவுனியா, ஓக. 31
வவுனியா - மன்னார் வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இன்னொருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ☞12

# காணாமலாக்கப்பட்டோருக்காக கிளர்ந்தெழுந்தது தமிழர் தாயகம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 31
சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினமான நேற்று, இறுதிப்போரின்போதும் அதற்கு முன்னதாகவும் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி, தமிழர் தாயகத்தின் பல பகுதி களிலும் போராட்டங்கள் மற்றும் பேரணிகள் முன்னெடுக்கப்பட்டன. ☞11

ஸ்ரீலங்கா அரசாங்கத்தால்
## காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு இன்னல்
### ம.உ. கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 31
வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் தொடர்ச்சியாகத் துன்புறுத்தப்படுகின்றன என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது. ☞10

வவுனியாவில்
## குடும்பப்பெண் கடத்தல்; நான்கு பேர் கைதாகினர்

வவுனியா, ஓக. 31
வவுனியாவில் குடும்பப் பெண்ணொருவர் கடத்தப்பட்ட நிலையில், அவர் பத்திரமாக மீட்கப்பட்டதுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். ☞10

## உறவுகளுக்காகப் போராட திருகோணமலையில் தடை!
### பொலிஸாரின் சமர்ப்பணத்தை ஏற்று கிண்ணியா நீதிமன்றம் உத்தரவு

திருகோணமலை, ஓக. 31
திருகோணமல்லையில் காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி நேற்று முன்னெடுக்கப்படவிருந்த போராட்டங்களுக்கு நீதிமன்றம் தடை விதித்து உத்தரவிட்டது. ☞10

## தடையுத்தரவுகளை மீறி திருமலையில் போராட்டம்

திருகோணமலை, ஓக. 31
காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி, நீதிமன்றம் விதித்திருந்த தடையுத்தரவுகளை மீறி திருகோணமலையில் பலநூறு மக்களின் பங்கேற்புடன் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது. ☞12

## தமிழ்ப் பொதுவேட்பாளருக்கே ஆதரவு: தமிழரசின் கிளிநொச்சிக் கிளை முடிவு

கிளிநொச்சி, ஓக. 31
ஜனாதிபதித் தேர்தலில், இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ்ப் பொதுவேட்பாளருக்கே ஆதரவளிக்கவேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை வலியுறுத்தியுள்ளது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி யாரை ஆதரிக்க வேண்டும் என்று மத்திய செயற்குழுவுக்கு தீர்மானத்தை வழங்கும் பொருட்டு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை நேற்றுக் ☞11

## பெண் இறப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 31
மீற்றர் வட்டிக்குக் கடன் பெற்ற குடும்பப் பெண்ணொருவர், தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று ☞10

## ரணில், சஜித், அநுரவை சந்தித்த அஜித் டோவல்

கொழும்பு, ஓக. 31
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலின் முதன்மை வேட்பாளர்களான, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான சஜித் பிரேமதாஸ ஆகியோரை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (அ-ஓ-6-26)

## யாழில் சஜித்

யாழ்ப்பாணம், ஓக. 31
ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித், யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார். இந்தப் பயணத்தின் போது, பரந்து ☞11

## புறக்கணிப்பும் பொதுவேட்பாளரும் தமிழர்களுக்குத் தேவையற்றவை!
### வெற்றிவேட்பாளரை ஆதரியுங்கள்; அஜித் டோவல் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஓக. 31
ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் மற்றும் புறக்கணிப்பு கோஷங்கள் தேவையற்றவை. தமிழர்கள் பிரதான வேட்பாளர்களில் வெற்றிபெறக் கூடியவர்களுடன் பேரம்பேசி அவர்களை ஆதரிக்க வேண்டும் - இவ்வாறு இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், தமிழ்க்கட்சிகளின்பிரதிநிதிகளுக்கு ஆலோசனை கூறியுள்ளார். ☞10

## சிங்கள வாக்குகளால் மட்டும் ஆட்சியமைக்க விரும்பவில்லை
### சிறுபான்மையினரின் வாக்குகளும் தேவை என்கின்றார் அநுர குமார



திருகோணமலை, ஓக. 31
தனிச்சிங்கள வாக்குகளால் மாத்திரம் ஆட்சியமைக்க விரும்பவில்லை. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரதும் நம்பிக்கையை வென்றெடுத்த அரசாங்கமொன்றே எமக்குத்தேவை ☞11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இலங்கையின் வளங்களை அந்நியர்களிடம் கையளியோம்

## ஜனாதிபதி வேட்பாளர் நுவான் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஓக. 31**

**எமது நாட்டின் வளங்களும் நிலங்களும் இறைமையும் இந்தியா, சீனா உள்ளிட்ட பிறநாடுகளுக்கு தாரைவார்த்துக்கொடுக்கப்படுகிறது. இதற்கு ஒரு போதும் நாம் இடமளிக்கக்கூடாது.**

-இவ்வாறு யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவான் போபகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த நாடு தொடர்ந்து புரையோடிப் போய் உள்ளது. வடக்கு - கிழக்கு மக்களின் வளங்கள் இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்கு விற்கப்படுகின்றன. எமது நாட்டின் வளங்களை அபரிக்கும் வகையில் அவை பல திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளன.

ஆனால், பிறநாடுகளோ இலங்கை போலன்றி தனது ஒரு துண்டு நிலத்தைக்கூட விட்டுக்கொடுப்பதில்லை. இந்த அரசாங்கத்திடம் தன்னிறைவுப் பொருளாதாரத்துக்கான சிறந்த திட்டமின்மையே இதற்குக் காரணம். அனைத்துப்பொருள்களுமே இறக்குமதியிலேயே தங்கியுள்ளது. முதலில் எமது வளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை பெருக்குவதற்கு விசேட திட்டங்களை வகுக்க வேண்டும். இறக்குமதியைக் கட்டுப்படுத்தவேண்டும். அடித்தட்டு மக்களினுடைய அடிப்படைத் தேவைகள் குறித்து ஆராய்ந்து அதிலிருந்து உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்கி நாட்டின் தன்னிறைவுக்கு வழி வகுக்கவேண்டும். அதற்கான சிறந்த திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்துவோம் - என்றார். (ச)

# நாமலின் நிலைப்பாடு திங்களன்று தெரியும்

கொழும்பு, ஓக. 31

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு சம்பந்தமாக நாமல் ராஜபக்சவின் நிலைப்பாடு என்னவென்பது நாளைமறுதினம் திங்கட்கிழமை அறிவிக்கப்படவுள்ளது.

பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவின் தேர்தல் அறிக்கை அன்றைய தினம் வெளியிடப்படுகின்றது. அதில் வடக்கு- கிழக்கு பிரச்சினை தொடர்பில் நாமலின் அணுகுமுறை விவரிக்கப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஓ-44)

# ஐ.ம.ச. பொருளாதாரத் திட்டம் 4 ஆம் திகதி வெளியீடு

கொழும்பு, ஓக. 31

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியின் பொருளாதார வேலைத்திட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பொருளாதார நிபுணருமான கபீர் ஹாசீம் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

ஒரு வருடத்துக்குள் நாட்டை மீட்பது எப்படி, அனைத்துத் துறைகளுக்குமான திட்டங்கள் என்ன என்பது உள்ளிட்ட பொருளாதார வேலைத் திட்டங்கள் விளக்கப்பட்டுள்ளன எனவும் கபீர் ஹாசீம் குறிப்பிட்டார். (ஓ-44)

# நாட்டை மீட்டவர் ரணில் மட்டுமே

## விஜயகலா புகழாரம்

யாழ்ப்பாணம், ஓக. 31

நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டபோது நாட்டு மக்களை வலிகளில் இருந்து காப்பாற்றிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வட்டுக்கோட்டை இளைய நட்சத்திரம் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த காலங்களில் பிழையான தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு இந்த நாடு வங்குரோத்து நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. 2022ஆம் ஆண்டு அரகலய போராட்டத்தின்போது எந்தவொரு அரசியல்வாதியும் நாட்டின் தலைமைத்துவத்தை பயம் மற்றும் நிதி காரணமாக பொறுப்பேற்க தவறிவிட்டார்கள்.

இந்நிலையில், தேசியப் பட்டியலில் 5 வீதத்துக்குள் உள்வாங்கப்பட்டு ஜனாதிபதியாகிய ரணில் விக்கிரமசிங்க 2 வருடங்களில் நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டெடுத்தார்- என்றார். (ஓ-27)

# ஐ.தே.க. பதவியில் நீங்கமாட்டேன்

## பாலித ரங்கே அறிவிப்பு



வவுனியா, ஓக. 31

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் மாற்றம் வரவுள்ளதென அரசியல் வட்டாரங்களில் தகவல் கசிந்து வரும் நிலையில், தான் கட்சிப் பதவியை இராஜினாமா செய்யவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார நேற்று அறிவித்துள்ளார்.

தற்போதைய பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி அதிருப்தியில் இருக்கின்றார் எனவும், பொதுச் செயலாளருக்குரிய பணிகள் தற்போது ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளது எனவும் கூறப்பட்டது.

புதிய பொதுச் செயலாளராக தலதா அத்துகோரள நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தநிலையில் பாலித ரங்கே பண்டார,

"ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை நான் இன்னும் இராஜினாமா செய்யவில்லை. பதவியைத் துறக்குமாறு ஜனாதிபதி என்னை வற்புறுத்தவும் இல்லை.

பணத்துக்காக நான் விலைபோய் விடவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (ச-44)

# தமிழ்ப் பொதுவேட்பாளர் கூட்டம் புதுக்குடியிருப்பில்



வவுனியா, ஓக. 31

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராகப் போட்டியிடும் பா.அரியநேந்திரன் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை புதுக்குடியிருப்பில் இடம்பெறவுள்ளது.

பொலிகண்டி முதல் பொத்துவில் வரை முன்னெடுக்கப்பட்டு வரும் 'நமக்காக நாம்' பிரசார பயணத்தில் இந்த மாபெரும் பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. இதன்போது தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உரை நிகழ்த்த உள்ளனர். (ச-100)

# ஹிருணிகா சஜித்துடன்தான்

யாழ்ப்பாணம், ஓக. 31

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பக்கமே நிற்கிறார். ரணில் பக்கம் செல்வதற்கு வாய்ப்புகள் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தி வட மாகாண பிரதம அமைப்பாளர் உமாச்சந்திரப் பிரகாஷ் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, ஹிருணிகா, ரணில்விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கப்போவதாகப் பேசப்படுகிறதே என எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஹிருணிகா ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸவுடன் பயணித்துவருகிறார். அவர் துணிச்சல்மிக்க பெண். நானும் பல்வேறு போராட்டங்களில் அவருடன் இணைந்து பயணித்து இருக்கிறேன்.

எமது போராட்ட வழக்குகள் நீதிமன்றில் நிலுவையில் உள்ளன. ஆகவே ஹிருணிகா ரணில் பக்கம் செல்வதற்கான வாய்ப்புகள் இல்லை -என்றார். (ஓ-20,27)

# தேர்தல் விதிமீறல் ஒரு நாளில் 114

கொழும்பு, ஓக. 31

கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் 114 தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஜூலை 31ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 28 வரை 1,374 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் 62 முறைப்பாடுகள் தேர்தல் சட்டவிதிமீறல் தொடர்பானது எனவும் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக. 31
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ். நல்லூர்க்கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளன. சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்ற பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. (ச-45)



## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 31
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க்கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் ச. ஸ்ரீசற்குணராஜா இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள, பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தரால் கௌரவிக்கப்பட்டார். (ச-45)













## நல்லூரானின் தண்டாயுதபாணி உற்சவம்





யாழ்ப்பாணம், ஓக. 31
வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க்கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருந் திருவிழாவின் தண்டாயுதபாணி உற்சவம் (மாம்பழத் திருவிழா) நேற்று வெள்ளிக்கிழமை காலை 6.45 மணிக்கு நடைபெற்றது. (ச-45-66-100)

## நல்லூர்த் திருவிழாவின் 23ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 31
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க்கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

23ஆம் நாள் நிகழ்வு, நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இணுவில் மல்லாதோட்ட வைரவர் ஆலய பிரதம குரு மதுரவாகீசர் சைவப்புலவர் சிவஸ்ரீ குமார. சுவாமிநாதக்குருக்கள் தலைமையில் நடைபெற்றன. பிரதம அதிதியாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் உமாமகேஸ்வரன், சிறப்பு அதிதியாக கோப்பாய்ப் பிரதேச செயலர் சண்முகராஜா சிவஸ்ரீ, கௌரவ அதிதியாக வேலணை பிரதேச உதவிப் பிரதேச செயலர் கணேசமூர்த்தி பார்த்தீபன் மற்றும் இலங்கை நாடாளுமன்ற ஆய்வு உத்தியோகத்தர் விஸ்வலிங்கம் முரளிதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, உரும்பிராய் நாகலிங்கேஸ்வரர் அறநெறிப் பாடசாலை, ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை, நீர்வேலி பொன் சக்தி கலாஷேத்திர அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. விசேட நிகழ்வாக எ.ஜி.எஸ். சுவாமிநாதசர்மா இசை அர்ச்சனை அக்கடமி குழுவினரின் 'பக்தி இசை' நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-45)



## நல்லூரரான் சிறப்பம்சம்

### பாவிலூறிய நாவினான்

நிலவும் அரவும்கொன்றை மலரும் சடையில் அணி
நிமலர் அருளும்கந்த வேளையே– அன்பால்
நிதமும் பணிவர் எந்த வேளையும்– வெண்
நீறுபூசுவர் ஆறுமாமுகன் நீலமாமயில் ஏறுகோலமே
நினைவர் கசிந்துருகி ஆடுவார்– பாப்
புனைவர் இசைகலந்து பாடுவார்
பலகுன் றுகளுவந்த முருகன் மறையை முன்பு
பரமன் செவியில்அருள் பாலனும்– சூரன்
பணியும் குழந்தைவடி வேலனாம்– தமிழ்ப்
பாவிலூறிய நாவினான் என தாவியானவன் தேவிமாரொடு
பதியிற் சிறந்தநல்லை மேவினான்– என்
பனுவற் குகந்த பெரும் பேரினான்!

■ கவிஞர் சோ.பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவள விழா காணும் மோகன் சுவாமிகள்



■ கே.எஸ். சிவஞானராஜா

ஞானச்சுடராக, விளக்காக, ஒளியாக, முகிலாக, கலசமாக, கொழுந்தாக, கருவூலமாக, விருட்சமாக, போதினியாக, கரும்பாக, பல்லவியாக, சொரூபியாக, மொழியாக உலக மக்களால் போற்றப்படுபவர், சந்நிதியான் ஆச்சிரம பீடத்தின் முதல்வராகத் திகழும் மோகன் சுவாமிகள் எனப்படும் மோகனதாஸ் ஐயா ஆவார். தவத்திரு மயில்வாகன சுவாமிகளின் சீடனாக விளங்கி, மாபெரும் தொண்டுகளை ஆற்றி வருகின்ற புண்ணிய சீலராகச் சந்நிதியான் ஆச்சிரமத்தினை வழிநடத்தி, ஆன்மீக விளைச்சலை இந்த மண்ணுக்கு ஈந்துள்ளார்.

பன்முக ஆளுமையின் அதிபதியாக, நிகரற்ற அருளாளனாக பவளவிழா நாயகனாகத் திகழ்ந்து வாழ்த்துகளுக்குச் சொந்தக்காரராகின்றார். ரமண மகரிஷி , மயில்வாகனம் சுவாமிகளை ஆட்கொண்டு அன்னம்பாலிக்கும் பென்னம் பெரிய பணியை ஒப்படைத்ததுபோல, மயில்வாகனம் சுவாமிகளும், மோகன் சுவாமிகளை ஆட்கொண்டு அன்னம்பாலிக்கும் அட்சய பாத்திரத்தை உவந்து உபயமாக்கினார். அது இன்றுவரை இனிக்கின்றது. எது எப்படி இருப்பினும், தானம், நிதானம், அவதானம் மூன்றும் பிரதானமாகும். இது செம்மையாக இயங்குமாக இருந்தால், தான தருமம் ஓங்கி, உலப்பிலா ஆனந்தம் பெருகும். முருகன் தருகின்றான். நான் கொடுக்கின்றேன். என்னிடம் எதுவுமில்லை.

எல்லாம் அவன் செயல் இதுவே மோகன் சுவாமிகளது தாரக மந்திரம். அதுவே ஆச்சிரமத்தின் வழிபாடுமாகும். இத்தகு சிந்தனை எல்லோர் மனதிலும் விளையுமாயின் அறம் வென்று ஆன்மீகம் பாலிக்கும். ஆச்சிரமம் அன்றும் இன்றும் என்றும் அறம் பாலிக்கும் ஒரு அட்சய பாத்திரமாய் மிளிர்கிறது. அன்னதானக் கந்தனாக செல்வச் சந்நிதியான் நீடித்து வாழ்வதுபோல, சந்நிதியான் ஆச்சிரமும் அனைத்துத் தானங்களையும் சொந்தமாக்கியுள்ளது. அதன் பணிகள் அளப்பரியது. அன்னதானப்பணி, கல்விப்பணி, சமூகப் பணி ,சமயப்பணி , அனர்த்தப்பணி, மருத்துவப்பணி, ஞானச்சுடர்பணி, அவசரகால இடர்ப்பணி, பாடசாலை பௌதிக வளப்பணி, கலை, கலாசார பண்பாட்டு வளர்ச்சிப்பணி, ஆலய நித்திய - நைமித்திய பூஜா விருத்திப்பணி, கும்பாபிஷேக வேண்டுதல் பணி, ஆரம்ப முன்பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் வரை கற்கும் மாணவர்களுக்கான மாதாந்த நிதியுதவிப் பணி, பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான நிவாரணப் பணி, சிறுவர் முதியோர்களுக்கான அத்தியாவசியப் பணி, சுய தொழில் ஊக்கப்பணி, விவசாய நடவடிக்கைக்கான உதவும் பணி, சத்திரசிகிச்சைகளுக்கான நிதியுதவிப் பணி, மூக்குக் கண்ணாடி தேவைப்படுவோருக்கான கண்ணாடி வழங்கும் பணி என்பதாக அல்லும் பகலும் ஆவனம் புரியும் அத்தனை பணிகளும் தளராமல், தாழாமல் நேர்த்தியாக

**அடுத்த நூற்றாண்டுகளுக்குத் தக்கபடியான தகைமைகளை ஆளுமையாக வளர்தெடுக்கின்ற வல்லமைக்கு மோகன் சுவாமிகள் நல்லதோர் உதாரணமாகப் பிரகாசிக்கின்றார். சந்நிதியான் ஆச்சிரமத்தில் சுவாமிகளின் விரலுக்கு அடிபணிந்து ஒழுக்கசீலர்களாகப் பொறுப்புணர்ச்சியோடு சுமார் பதினைந்து பெறுமதியானவர்கள் கடமையாற்றுகின்றார்கள்.**

ஆற்றப்படுகின்றது. இதைவிட 365 நாளும் இனம், மதம், மொழி, குல, நில, நிற, ஜாதி, பேதங்களுக்கப்பால் நித்திய அன்னப்பணி சீராக நடைபெறுகிறது. இது இலங்கையில் தனித்துவமானதாகும்.

அடுத்த நூற்றாண்டுகளுக்குத் தக்கபடியான தகைமைகளை ஆளுமையாக வளர்தெடுக்கின்ற வல்லமைக்கு மோகன் சுவாமிகள் நல்லதோர் உதாரணமாகப் பிரகாசிக்கின்றார். சந்நிதியான் ஆச்சிரமத்தில் சுவாமிகளின் விரலுக்கு அடிபணிந்து ஒழுக்கசீலர்களாகப் பொறுப்புணர்ச்சியோடு சுமார் பதினைந்து பெறுமதியானவர்கள் கடமையாற்றுகின்றார்கள். மாதாந்தம் 2 ஆயிரத்து 100 ஞானச்சுடர் இதழ்கள் உள்நாடு வெளிநாடு இரண்டுக்குமாக உரியவர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இதன்மூலம் ஆன்மீக வாசகர்கள் ஏராளமானவர்கள் வசீகரிக்கப்பட்டுள்ளனர். கூடவே, எழுத்தாளர்கள் வரவேற்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர். இதன் மூலம் சமயம், தமிழ், கலை, பண்பாடு சமூகத்துக்கு நேர்த்தியாகக் கையளிக்கப்படுகின்றது. இதற்கப்பால் ஒவ்வொரு வெள்ளிதோறும் கலை சார்ந்த இசை நடன வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம், உபந்நியாசம், பேச்சு, தொடர் பேச்சு, நிறைவாக இறுதி வெள்ளியன்று ஞானச்சுடர் வெளியீடும் அரங்கேற்றப்படுகிறது. ஆன்மீக ஆளுமையால் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை அன்று பவள விழாவினை வென்று , ஆயிரம் பிறை கண்டு, நூற்றாண்டு காலமதைப் பேறாக வாழ்ந்திட வேண்டுமெனக் காலம் கரங் கூப்புகின்றது. ■

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். தாயாரின் உடல் நிலை சீராகும். கல்யாணப் பேச்சு சாதகமாக முடியும். மகிழ்ச்சியான நாள். திடீர்ச் செலவுகளும் ஏற்படும். முருகப் பெருமானை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் கூடுதலாகும்.

**இடபம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமற்போன முக்கியமான ஆவணம் ஒன்று கிடைக்கும். புது யுக்திகளை கையாள்வீர்கள்.

**மிதுனம்:** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களைச் சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துகொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள். இழப்புகளை சரி செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண் கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அலைச்சல் உண்டு. திடீர்ப் பயணங்கள் இருக்கும். தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதுப் பொறுப்புகள் தேடிவரும்.

**மீனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்று கொள்வீர்கள்.



# ‘பூக்களைப் பறிக்காதீர்’ வீதி நாடகம் அரங்கேற்றம்

கிளிநொச்சி, ஓக. 31

கிளிநொச்சி, கண்ணகைபுரம் மெதடிஸ்த திருச்சபையில் இயங்கிவரும் வெஸ்லியன் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில், சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ‘பூக்களைப் பறிக்காதீர்கள்’ எனும் வீதி நாடகம் மெதடிஸ்த திருச்சபை வளாகம், முக்கொம்பன் பாடசாலை மைதானம், பூநகரி சாமிப்புலம் கிராமம் ஆகிய மூன்று இடங்களில் கடந்த புதன்கிழமை அரங்கேற்றப்பட்டன. (ச-25- 13,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மீட்பர் யார்?

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகளில் இம்முறை பொருளாதார நெருக்கடி தொடர்பான விவகாரங்களே முதலிடத்தைப்பெற்றிருக்கின்றன. கடந்த காலங்களைப்போன்று இனவாத அரசியலை தேர்தலின் பிரதான வேட்பாளர்களான மூவரும் கையில் எடுக்கவில்லை. பிரதான வேட்பாளர்கள் கையிலெடுக்காத இனவாதத்தை நான்காவது வேட்பாளராக இறுதி நேரத்தில் நுழைந்து கொண்ட ராஜபக்சக்களின் அரசியல் வாரிசான நாமல் மாத்திரம் முன்கொண்டு செல்கின்றார். ஆனால் அவரது இனவாதப் பரப்புரை கடந்த காலங்களைப்போன்று பௌத்த - சிங்கள தேசிய சக்திகளை அவரின் பின்னால் இழுக்கவில்லை. மறுபுறம் விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில போன்றோரின் இனவாதக் கூட்டணியின் வேட்பாளரான திலித் ஜெயவீர கிளப்பிய பௌத்த -சிங்கள தேசியவாதமும் பெருமளவில் எடுபடவில்லை.

இவ்வாறானதொரு நிலையிலேயே பொருளாதார மீட்பர் யார் என்ற கேள்விக்கான விடையே இம்முறை தேர்தலின் முடிவாக இருக்கப்போகின்றது. மக்களில் பெருமளவானோர் கடந்தகாலங்களைப் போன்று முற்கூட்டியே தமது வாக்கு யாருக்கு என்பதை முடிவு செய்யவில்லை. தேர்தலன்று பார்ப்போம் எனக் காத்திருக்கின்றார்கள். சிலர் யாருக்காவது வாக்களித்து விட்டுப்போவோம் என்ற மனநிலையிலும் இருக்கின்றார்கள். சரியானதொரு தலைவரைத் தெரிவுசெய்யா விட்டால், அதனால் ஏற்படும் விளைவுகளை ஒட்டு மொத்த நாட்டு மக்களும்தான் அனுபவிக்க நேரிடும். 2019ஆம் ஆண்டு நாட்டில் பெருமளவான மக்களின் ' 69 இலட்சம் வாக்குகளுடன் கோத்தாபய ஜனாதிபதியாகத் தெரிவாகியிருந்தார். அவரால் இந்த நாடு அனுபவித்த நெருக்கடிகளின் விளைவுகள் இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. எனவே, இம்முறை வாக்கிடப்போகும்போது நாம் வாக்கிடும் நபர், நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பாரா? என்பதையும் சிந்திக்கவேண்டியிருக்கின்றது. இதற்கு அப்பால், தமிழர்களாக அரசியல் ரீதியான தீர்வு, நடைமுறைப் பிரச்சினைகளுக்கான தீர்வு என்பன தொடர்பாகவும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் வரிசை யுகத்தை முடிவுக்குக் கொண்டுவந்தேன் என்பதை முன்னிறுத்தியே பரப்புரை முன்னெடுக்கின்றார். நாட்டின் வரிசையுகம் முடிவுக்கு வந்தது அவரால் அல்ல என்றும் இந்தியாவின் கடனுதவியால்தான் அது சாத்தியமானது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் 'குட்டு' வைத்துள்ளார். உண்மையில் கடன்களால்தான் நாடு இப்போது ஓடிக்கொண்டிருக்கின்றது. நாட்டை யாரும் மீட்கவில்லை.

உண்மையான நெருக்கடி 2028 ஆம் ஆண்டுதான் ஆரம்பமாகப்போகின்றது. எமது நாடு வாங்கிய கடன்களையும், வாங்கிக் கொண்டிருக்கும் கடன்களையும் சேர்த்து 2028ஆம் ஆண்டிலிருந்துதான் திருப்பிச் செலுத்த தொடங்கப்போகின்றது. அதற்கிடையில் நாட்டின் உற்பத்தி மேம்பட்டு, வருமானம் அதிகரிக்கவேண்டும். அப்போதுதான் நாட்டுக்கு மேலதிக சுமையாக அமையப் போகும் கடன் மீளச் செலுத்தலை சமாளிக்க முடியும். உற்பத்தியை மேம்படுத்துவது தொடர்பிலோ நாட்டின் வருமானத்தை அதிகரிப்பது தொடர்பிலோ அக்கறை காட்டாது விட்டால், நாட்டு மக்களை வதைக்கும் வகையில் வரிகளை அதிகரித்தே கடன்களை மீளச் செலுத்தவேண்டியிருக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ இருவரும், ஒட்டுமொத்த சனத்தொகையின் 7 சதவீதமாக இருக்கின்ற அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 35 சதவீதத்தால் அதிகரிப்பதற்கான வாக்குறுதியை முன்வைத்திருக்கின்றனர். இந்தச் சம்பள அதிகரிப்புக்கான நாட்டின் வருவாய் அதிகரிப்பை பற்றி அவர்கள் இருவரும் எதுவும் சொல்லவில்லை. இப்படியான அறிவிப்புகள் ஊடாக வாக்குகளை கவர்ந்திழுக்கலாம். கோத்தாபயவும் அதையே செய்தார். ஆனால் இறுதியில் என்ன நடந்தது? நாட்டின் வருமானத்தை உயர்த்துவதற்கான திட்டங்களை வெளிப்படுத்தாமல் இப்படியான சம்பள உயர்வுகள் ஊடாக, அந்த அரசாங்க ஊழியர்களும் ஒட்டுமொத்த நாட்டு மக்களுடன் சேர்ந்து மீண்டும் வரிசையில் நிற்கவேண்டித்தான் ஏற்படும். எனவே ஒவ்வொரு வேட்பாளர்களும் அறிவிக்கும் சம்பள உயர்வுகள் 'நிவாரணங்களின் பின்னால் நாட்டின் வருமானத்தை உயர்த்தும் திட்டங்களை அவர்கள் வைத்திருக்கின்றார்களா என்பதை ஆராய்ந்து வாக்கிடவேண்டும்.




## அஞ்சல்மூல வாக்களிப்பு ஒதுக்கப்பட்ட இடங்கள்!

கொழும்பு, ஓக. 31

**ஜனாதிபதித் தேர்தலில் அஞ்சல்மூல வாக்குகளைப் பதிவு செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் தொடர்பான விவரங்களைத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

அதற்கமைய, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி மாவட்டச் செயலகங்கள் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலகங்களில் அஞ்சல்மூல வாக்குகளைச் செலுத்த முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் செப்ரெம்பர் 4ஆம், 6ஆம் திகதிகளில் சிரேஷ்ட உதவி மற்றும் உதவிப் பொலிஸ் அலுவலகங்கள், பொலிஸ்அத்தியட்சகர் காரியாலயம், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், பொலிஸ் நிலையங்கள், விசேட அதிரடிப்படை முகாம்கள் மற்றும் விசேட பொலிஸ் பிரிவுகள் என்பனவற்றிலும் அஞ்சல் மூல வாக்களிப்பைப் பதிவு செய்ய முடியும்.

எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் முப்படை முகாம்கள் மற்றும் ஏனைய அனைத்து அரச நிறுவனங்களிலும் அஞ்சல்மூல வாக்குகளைப் பதிவு செய்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

## பட்டத்திலிருந்து மின்சாரம்

கொழும்பு, ஓக. 31

வீட்டு உபயோகத்துக்குத் தேவையான மின்சாரத்தை உயரத்தில் பறக்கும் பட்டங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் வானியல் பணிப்பாளர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார். நுவரெலியாவில் நடந்த பட்டத் திருவிழாவின் போது நடத்தப்பட்ட சோதனையைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை ஏற்கனவே அமெரிக்காவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு உயரப்பறக்கும் ஒரு பட்டத்தின் மூலம் குறைந்தது 4 வீடுகளுக்கான மின்சாரம் பெறப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (ச)

## படையினருக்கு கொடுப்பனவு

கொழும்பு, ஓக. 31

அடுத்த வருடம் முதல் பாதுகாப்பு படையினருக்கு அத்தியாவசியப்பொருளுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார். இந்தக் கொடுப்பனவு அவர்களது சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-6)

## வரி செலுத்துவோர் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 31

கடந்த ஜனவரி மற்றும் ஜூன் மாதங்களுக்கு இடையில் வரி செலுத்துவோரின் எண்ணிக்கை 3 இலட்சத்து 264 ஆக அதிகரித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் 31 வரை, மொத்த வரிசெலுத்துவோர் எண்ணிக்கை 997,858 ஆக இருந்த நிலையில், இந்த ஆண்டு ஜூலை 31 ஆம் திகதி இந்த எண்ணிக்கை 1,314,122 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## வசமாக மாட்டினர் போலி ஆசாமிகள்

கொழும்பு, ஓக. 31

அளுத்கம தர்கா நகரில் இறைவரித்திணைக்கள அதிகாரிகள் எனக் கூறி கடைகளில் வருமான வரி அறவிட்ட போலி ஆசாமிகள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாடுகளையடுத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-6)

### நாளை

01.09.2024

ஞாயிற்றுக்கிழமை - ஆவணி - 16

சுபநேரம் : 09.05 - 10.35

ராகுகாலம் : 04.35 - 06.05

### நாளொரு நல்வார்த்தை

வலிமை என்பது உடல் திறனால் வருவதில்லை. இது ஒரு அசைக்கமுடியாத விருப்பத்திலிருந்து வருகிறது.

-மகாத்மா காந்தி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேற்படைகள், கோலாட்டங்களுடன் நல்லூர்க் கந்தன் ஒருமுகத் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 31

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவின் ஒருமுகத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது.

நேற்று மாலை 4.45 மணியளவில் வசந்தமண்டபப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து நல்லூர் வேற்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராக உள்வீதியில் எழுந்தருளி உலா வந்தனர். மாலை 6 மணியளவில் ஆலய ஒருமுகத் திருவிழாவில் மாத்திரம் தனித்துவமாக ஓங்கி ஒலிக்கும் உலகப் பிரசித்தமான கட்டியம் கூறலைத் தொடர்ந்து ராஜகுதிரை வாகனத்தில் நல்லூரான் மகாராஜனைப் போன்று வேற்படைகள் சூழக் கம்பீரமாக வீற்றிருந்து வலம்வர இருமருங்கிலும் முருகப் பெருமானின் இருபெரும் சக்திகளான வள்ளி தெய்வயானை நாயகியர் மூன்று சிறிய குதிரைகள் பூட்டப்பட்ட வாகனங்களிலும் ஆயிரம் ஆயிரம் அடியவர்கள் புடைசூழ வெளிவீதியில் பவனி வந்தனர்.

இதேவேளை, வெளிவீதிப் பவனியின் போது தமிழ் மக்களின் பாரம்பரியமான கோலாட்ட நிகழ்வு நல்லூரான் அடியவர்களின் கண்களுக்கு விருந்தாய் அமைந்திருந்தது. (ம-66)



# தேசியமட்ட பாசறைப் போட்டி அத்தியார் இந்து சாதனை!



மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தால் தேசிய கல்வி நிறுவகம் மகரகமவில் நடத்தப்பட்ட சுற்றாடல் முன்னோடி தேசிய பாசறைப் போட்டியில் 75 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்கள் சாதனையாளர்களாக கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் யாழ். அத்தியார் இந்துக் கல்லூரி யோ.மேதுஷா, ச.சுதர்சன், பொறுப்பாசிரியை திருமதி இ.சிவகுமாரன் ஆகியோர் கலந்து சிறப்பித்து தங்கவர்ணப் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர். (ஏ-ரி-17)

## மரண அறிவித்தல்



மண்ணில் 19 . 08 . 1945

விண்ணில் 30 . 08 . 2024

### யோகராணி ஜீவதாஸ் இராசநாதன்

**(ஓய்வுநிலை ஆசிரியர், மட்/கல்லடி விபுலானந்த வித்தியாலயம்)**

149/3, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகராணி ஜீவதாஸ் இராசநாதன் அவர்கள் நேற்று (30.08.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆபிரகாம் - ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - கிறிஸ்தினாள் தம்பதியரின் அன்பு மருமகளும், திரு.ஜ.ஜீ.இராசநாதன் (ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், சத்திய சர்மிளா (ஆசிரியை, வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தாயாரும், டெனி கொன்ஸ்ரன்ரயின் அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கிருபா (தேவ ஊழியர்) மற்றும் மேசி, கனி, அன்பழகன் (ஓய்வுநிலை வங்கி உத்தியோகத்தர், இலங்கை வங்கி), எஸ்தர் (தேவ ஊழியர்) ஆகியோரின் மைத்துனியும், தவமணி, றெஜினா, தர்மராஜா (ஓய்வுநிலை பிரதம தபாலதிபர்), வரதன் (கட்டட ஒப்பந்தகாரர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், லொஹான் (மாணவன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), துஷாரி (மாணவி, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31.08.2024) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இலங்கைப் பெந்தெக்கோஸ்தே சபையின் ஊழியர்களினால் நடாத்தப்பட்டு, பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ்ப்பாணம் கொட்டடி பெந்தெக்கோஸ்தே சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**149/3, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**077 7142 160**
**077 162 3664**

(CS 10653) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 02 . 1964

மறைவு 29 . 08 . 2024

### திருமதி சிவகுமாரன் தியாகவதி

**(ஓய்வுபெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர், வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்)**

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமாரன் தியாகவதி (ஓய்வுபெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்) அவர்கள் நேற்றுமுன்தினம் (29.08.2024) வியாழக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகையா - பேரின்பவதி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், வேலாயுதபிள்ளை சிவகுமாரன் (ஓய்வுபெற்ற சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர், யாழ் பல்கலைக்கழகம்) அவரது அன்பு மனைவியும், தியாகசீலன் (லண்டன்) அவரது பாசமிகு சகோதரியும், சிவானிஜா (ஆசிரியை இந்துக் கல்லூரி - கொழும்பு 04), சிவானுஜன் (உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை), பவானுஜன் (மாணவன், கொழும்பு பல்கலைக்கழகம்), சிவகஜேந்திரன் (மாணவன், பொறியியற் பீடம், பேராதனை பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான செட்டியார், சின்னத்துரை, தம்பிஐயா, சங்கரப்பிள்ளை, மனோன்மணி ஆகியோரின்பெறாமகளும், காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, சுப்பிரமணியம், அருணாசலம் ஆகியோரின் மருமகளும், அனுஷா (லண்டன்), தூயகுமாரன் (ஓய்வுபெற்ற சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் - யாழ் பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற யோகமலர் மற்றும் மல்லிகாமலர் (லண்டன்), புனிதமலர் (லண்டன்), சந்திரமலர் (லண்டன்), குசலகுமாரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், ஹேமநந்தினி (ஆசிரியை, கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்), நவரட்ணம், புவனேஸ்வரன் (லண்டன்), கெங்காதரன் (லண்டன்), ஞானசீலன் (லண்டன்), விமலினி (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், கிருஷன் (லண்டன்), அபிஷா (லண்டன்), திபிஷா (லண்டன்), பபிஸ்ரா, பிறேமானந்த், பானுப்பிரியா (ஜேர்மனி), பானுஜன் (லண்டன்), அனுஜன் (லண்டன்), லக்ஷிகா (லண்டன்), நந்தூஷன் (லண்டன்), பிறின்ஸ்ஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், டொறின்ரேணுகா, டினேஸ்காந்த், பேணாட் றிஷாந் (லண்டன்), போல் கஜேந்திரன் (மாணவன் பொறியியற்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), த்ரிஷா (லண்டன்), ரேத்ஷின் (லண்டன்) ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2024) ஞாயிற்றுக்கிழமை ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

(CS/56066) J-1

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மது விற்பனை நிலையத்துக்கு எதிர்ப்புத்தெரிவித்து போராட்டம்

மன்னார், ஓக. 31

**மன்னார் தலைமன்னார் பிரதான வீதி 2ஆம் கட்டைப் பகுதியில் புதிதாக திறக்கப்பட உள்ள மது விற்பனை நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பிரதேச மக்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன் பதாகைகளை ஏந்தியவாறு எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.**

மன்னார் நகரில் ஏற்கனவே மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ள நிலையில் புதிய மதுவிற்பனை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த நிலையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலகம் எவ்வித அனுமதியும் வழங்காத நிலையில் தற்போது கொழும்பில் அனுமதி பெற்று இன்னும் சில தினங்களில் குறித்த மது விற்பனை நிலையத்தை திறக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இது தொடர்பாக மன்னர் மதுவரி திணைக்களத்துக்குச் சென்று இது தொடர்பாக கேட்ட போது அவர்களும் புதிதாகத் திறக்கப்பட உள்ள மது விற்பனை நிலையத்துக்கு ஆதரவாகவும் தம்மோடு கடும் தொனியில் கதைத்ததாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டால் அப்பகுதியில் பல்வேறு கலாசார சீர்கேடுகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் உடனடியாக மது விற்பனை நிலையத்தை அங்கிருந்து அகற்ற மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-56,60)



## விபத்துகளை ஏற்படுத்தி தப்பிய கார் மடக்கிப்பிடிப்பு

வவுனியா, ஓக. 31

வவுனியா நகரில் ஆபத்தான வகையில் காரைச் செலுத்தி தொடர்ச்சியாக விபத்துகளை ஏற்படுத்தி வந்த காரின் சாரதியை அந்தப் பகுதி இளைஞர்கள் விரட்டிப் பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். வவுனியா, கூமாங்குளம் பகுதியில் இருந்து கார் உக்கிளாங்குளம் பகுதியில் விபதொன்றை ஏற்படுத்திவிட்டு நிறுத்தாமல் தப்பிச் சென்றது. அத்துடன் வைரவப்புளியங்குளம் மற்றும் நகரப் பகுதியிலும் ஏனைய வாகனங்களுடனும் மோதி விபத்தை ஏற்படுத்தித் தப்பியது.

அதனையடுத்து குறித்த காரை இளைஞர்கள் சிலர் விரட்டிச் சென்று பூந்தோட்டம்,பெரியார்குளம் பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்து கார்ச் சாரதியை நையப்புடைத்ததுடன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். விபத்துத் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-110)

## புதுக்குடியிருப்பில் ஓடுபிரித்துத் திருட்டு

முல்லைத்தீவு, வள்ளிபுனம் பகுதியிலுள்ள வீடொன்றில் கூரைபிரித்து பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று வீட்டு உரிமையாளரால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடந்துள்ளது. கூரையைப் பிரிந்து உள்நுழைந்த திருடர்கள் நகை, பணம் உள்ளிட்ட பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டனர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-19)

## மின் பாவனையில் 200 ஓட்டோக்கள்

கொழும்பு, ஓக. 31

கொழும்பில் பரீட்சார்த்தமாக 200 முச்சக்கர வண்டிகள் பெற்றோலில் இருந்து மின்சார வண்டிகளாக மாற்றப்பட்டுள்ளன.

யு.என்.டி.பி. நிறுவனமும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களமும் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

இந்தத் திட்டத்தில் பெண்களின் முச்சக்கர வண்டிகளுக்கும், முச்சக்கரவண்டியை வைத்து வேறு தொழில்களில் ஈடுபடுவோருக்கும், சொந்தப் பாவனைக்கென முச்சக்கரவண்டி வைத்திருப்போருக்கும் முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது. (ச-6)

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 36 பில்லியனை இழந்தது

### வெளிப்படையான விசாரணை தேவை
### ஜனக ரத்நாயக்க சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 31

பொருளாதார நெருக்கடி காலத்தில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு 36 பில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். கணக்காய்வாளர் நாயகம் பதிவு செய்த மிகப்பெரும் மோசடி இந்த ஊழல் தொடர்பாகக் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் மேற்கொண்ட விசாரணைகளில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, முன்னாள் அமைச்சர் சனக, மின்சக்தி எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த, பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் மொகமட் உவைஸ்,மின்சக்தி எரிசக்தி அமைச்சின் செயலர் மாப்ப பத்திரான ஆகியோர் சம்பந்தப்பட்டுள்ளனர். 2021,22 காலப்பகுதியில் நீண்டகால அடிப்படையில் எரிபொருள் கொள்வனவு ஒப்பந்தங்கள் செய்யப்படவில்லை இதனால் 36.5 பில்லியன் இழப்பு ஏற்பட்டது.

துறைமுகத்திலிருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவும் பெருமளவு மில்லியன் இழப்பு ஏற்பட்டது.

பொதுமக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில் பொறுப்புக்கூறலுடன் வெளிப்படையான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-22,6)

## தினம் தெரியுமோ?

**இந்தமுறை வீட்டுக்கட்சியின்ர மத்தியகுழுக் கூட்டத்தை வைச்சதில ஒரு வில்லங்கம் இருக்கெண்டு பட்சி சொன்னதெல்லோ. அது என்ன?**

**வழக்கமா சிறீதரன் எம்.பி. ஒவ்வொரு வருசமும் நல்லூர்த் தேருக்குப் போறவர். ஆனால் இந்தமுறை தேரையும் விட்டிட்டு. அவசரமா ஏதோ அலுவலா வெளிநாட்டுக்குப் போறார். அஞ்சாறுநாள் ஆள் நாட்டில நிக்காது. அதால கட்சித்தலைவர் மாவையரிட்ட அண்ணை நான் வெளிநாடு போறன். அதால 7 ஆம் திகதிக்கு முதல் மத்தியகுழுக் கூட்டம் ஒண்டும் போட்டுடாதையுங்கோ எண்டு கோரிக்கை வைச்சிருக்கிறார். அதுக்கு மாவையரும் ஓமோம், எனக்குச் சொல்லிப் போட்டீர் தானே. என்ன கூட்டமெண்டாலும் 7 ஆம் திகதிக்குப் பிறகுதான் வைப்பம் எண்டு உறுதிமொழி குடுத்திருக்கிறார். தலைவரிட்ட தன்ர பிரச்சினையைச் சொன்னதால, தான் நாட்டில நிக்காத நாளில கட்சிக்கூட்டம் ஒண்டும் நடக்காது எண்டு சிறியரும் வெளிநாட்டுக்குப் போற அடுக்குகளைப் பாத்திருக்கிறார்.**

**ஆனால் 'வாற முதலாம் திகதி வீட்டுக்கட்சியின்ர மத்தியகுழுக் கூட்டமாம்' எண்டு செய்தி வர. உடனேயே கட்சித் தலைவர் மாவையருக்கு சிறியர் கோல் எடுத்திருக்கிறார்.**

**என்னண்ணை, ஏழாம் திகதி வரை நான் நாட்டில நிக்கமாட்டன் கூட்டம் ஏதும் வைக்கப்போறியளோ எண்டு கேட்டதுக்கு இல்லை எண்டியள். இப்ப பார்த்தா முதலாம் திகதி கூட்டமெண்டு நியூஸ் வருகுது எண்டு கேட்டதுக்கு. அதுவந்து. நான் சொன்னான் தான். ஆனால் அவையள் அதைக் கேக்காமல் போட்டிட்டினம் எண்டு ஆள் மழுப்பியிருக் கிறார். அந்த 'அவையள்' ஆரெண்டு மாவையர் சொல்லாட்டியும், எல்லாருக்குமே வடிவாத் தெரியும். இப்பிடி கட்சியின்ர எம்.பி. ஒராள் தனக்கு நேரமில்லை எண்டு முற்கூட்டியே சொல்லியும், 'கூட்டத்தை வைச் சால் முதலாம் திகதிதான் வைப்பம்' எண்டு வீட்டின்ர திறப்பை வைச்சிருக்கிறவை ஒற்றைக்காலில நிக்கினம் எண்டால், உதுக்குப் பின்னால ஏதோ மர்மம் இருக் கெண்டுதானே அர்த்தம். வீட்டுக்கட்சி, இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில தங்கட ஆதரவு ஆருக்கெண்டு இன்னும் சொல்லேலை. எண்டாலும் அவையள் முடிவெடுக்கமுதலே, வீட்டுக்கட்சியின்ர அரியத்தாரை பொதுவேட்பாளரா, பொதுக்கட்டமைப்புக்காரர் அறிவிச்சிட்டினம். அதோட அரியத்தாருக்கு ஆதரவெண்டு சிறியரும் பப்ளிக்கா அறிவிச்சிட்டார். இப்ப இவையள் ரண்டுபேருக்கும் கட்சி ரீதியா குடைச்சல் குடுக்கத்தானாம் முதலாம் திகதி உந்த அவசர மீட்டிங்காம். மற்றப்படி ஜனாதிபதித் தேர்தலில என்ன நிலைப்பாடு எடுக்கிறது எண்டிறதைப் பற்றியோ, வழக்கை வேகமா முடிச்சு எப்பிடி கட்சியை சீராக்கிறது எண்டதைப் பற்றியோ இல்லையாம் உந்த மீட்டிங். எப்பவுமே கட்சியில போட்டியா இருக்கிறவைக்கு குழி பறிக்கிறதுக்கெண்டே மீட்டிங் வைக்கிற ஒரே கட்சி இந்தக் கட்சியா மட்டும் தான் இருக்கமுடியும்.**

**எண்டாலும் இப்ப கட்சிக்காரர் பொதுவேட்பாளருக்கு ஆதரவு எண்டு அறிவிச்சவை மேல நடவடிக்கை எடுக்கிறதெண்டால், கட்சி ஒரு முடிவை எடுக்கமுதலே 'பொதுவேட்பாளருக்கு நான் எதிர்.பொதுவேட்பாளருக்கு எதிரா பிரசாரம் பண்ணுவன்' எண்டு கூட்டம் வைச்சு அறிவிச்சவைக்கும் நடவடிக்கை எடுக்கத்தானே வேணும். ஏனெண்டால் கட்சியின்ர முடிவு வரமுதலே தாங்களா முடிவெடுத்து மற்றவைக்கு பாதை காட்டினது அவையெல்லோ?**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு பெருவிழா

முல்லைத்தீவு, ஓக.31

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், புதுக்குடியிருப்புப் பிரதேச கலாசாரப் பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டில், புதுக்குடியிருப்பு பிரதேச பண்பாட்டுப் பெருவிழா, உடையார்கட்டு மகாவித்தியாலயத்தின் கேட்போர்கூடத்தில் கந்தப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை அரங்கில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பதில் பிரதேச செயலரும், புதுக்குடியிருப்புப் பிரதேச கலாசாரப் பேர வையின் தலைவருமான சி.ஜெயகாந்த் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தி னராக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இராமசாமி மதியரசி கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச-25)

# தொழிற்சந்தை

யாழ்ப்பாணம், ஓக.31

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திலுள்ள வேலை வாய்ப்புத் தேடுவோருக்கான தொழிற்சந்தை எதிர்வரும் செப்ரெம்பர் 10 ஆம் திகதி பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக் களமும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தவுள்ள இந்தத் தொழிற்சந்தையில் பிரதேசத்தில் வதியும் தொழில்வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருக்கின்ற மற்றும் தொழில் வழிகாட்டல் தேவைப்படுகின்ற அனைவரும் கலந்து பயனடையமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## காணி விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கும்,
மானிப்பாய் பிரதான வீதிக்கும் மிக
அண்மையில் அமைந்துள்ள
ஏறத்தாழ 2 பரப்பு (20 பேர்ச்)
காணி விற்பனைக்கு உண்டு.
காணி வாங்க விரும்புவோர் மட்டும்
நேரடித் தொடர்பு கொள்ளவும்.

(CS/28648) J-1

தொலைபேசி:- 077 452 3070

# இலவசப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஓக.31

சுன்னாகம் பொதுநூலக டிஜிற்றல் அறிவு மையத்தினரின் ஏற்பாட்டில் இன்டநெட் ஒப் திங்ஸ் தொடர்பான மூன்று மாதகால இலவசப் பயிற்சிநெறி டிஜிற்றல் அறிவுமைய மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தரம்-7 முதல் பல்கலைக்கழகப் படிப்பை நிறைவு செய்தவர்கள் வரை இதில் பங்குபற்ற முடியும் என்றும் பயிற்சிநெறியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-25,66)

உங்கள் வெளிநாட்டு கனவை நனவாக்கிக் கொள்ள
Edlocate உடன் இணைந்து கொள்ளுங்கள் !



STUDY ABROAD DAY IN JAFFNA

SCHOLARSHIPS FOR HIGH ACHIEVERS*

ENTRANCE FREE

Australia | New Zealand | Canada | England | Ireland

SEP 07TH
நேரம்: 10.00 am முதல் 3.00 pm வரை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கலை அரங்கம் ( Arts Seminar Hall )

PROCESS YOUR APPLICATION WITH US FOR 2025 INTAKES
FOUNDATION | DIPLOMA | DEGREE | MASTERS | PHD

முற்பதிவுகளை மேற்கொள்ள:
077 222 3178 | 021 570 0750

Follow Us On

edlocate
Reach Light Beyond Borders
www.edlocate.lk

நாம் 24 ஆண்டுகால அனுபவம் மிக்க தொழில் வழிகாட்டிகள்

## பவள விழாவும் பிறந்த நாள் வாழ்த்தும்

கலாநிதி தவத்திரு
செ.மோகனதாஸ்




சுவாமிகளுடைய பவளவிழாவும், பிறந்ததின நிகழ்வும்
31.08.2024 சனிக்கிழமை நடைபெறும்.
பிறந்தநாள் வாழ்த்தும் பவள விழா நிகழ்வும் சிறப்பாக
நடைபெற மனமாற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

கந்தையா தர்மலிங்கம் JP
முன்நாள் துணைத் தவிசாளர் உறுப்பினர் வலி கிழக்கு
பிரதேச சபை புத்தூர் - நீர்வேலி.
T.P No :- 076 639 9218

சி.கு. சிவசுப்பிரமணியம்
சிவதுசந்தன்
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

## ANGEL INTERNATIONAL SCHOOL - MANIPAY

Congratulations to our best results achievers of Cambridge O/L and A/L May/June 2024.

A2 - SCIENCE STREAM



SAMJAPIN SRILANKANATHAN
A*,2A

AS - SCIENCE STREAM



THARMAVATHY BAVAPPERIYAN
3A

AS - MATHS STREAM



GASVINY SHANTHAKUMAR
2A, B

O/L - SCIENCE STREAM



VITHUSHAN SUTHARSAN
3A*, 3A

O/L - COMMERCE STREAM



VIPUSHANA SEYARASASINGAM
A, 3B, D

O/L - SCIENCE STREAM



S.DILAN SRISKANDARAJAH
2A*, 3A, C

O/L - SCIENCE STREAM



PIRIYANGARAJ RAJKUMAR
A*, 4A, C

O/L - SCIENCE STREAM



[illegible]
A*, 3A, C

O/L - SCIENCE STREAM



[illegible] VIJAYATHAS
A*, 3A, C

O/L - SCIENCE STREAM



THOMAS EDWARD. T
4A, B

O/L - SCIENCE STREAM



SANJAI SANJEEVAN
A*, 3A, B, C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
29 • 12 • 1943

மறைவு
04 • 09 • 2021

### அமரர் அண்ணாமலை குலசிங்கம்

(குலசி - பிரகாஸ் ரான்ஸ்போட் - உரிமையாளர்)

திதி: துவாதசி

ஆண்டுகள் மூன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள்
- திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## ஏழாவது ஆண்டு நினைவேந்தல்



31.08.2024

### அமரர் இ.அருள்நேசன்

(முன்னாள் எழுதுவினைஞர் மக்கள் வங்கி - மன்னார்,
போதகர் கிறிஸ்தவ குடும்ப சபை - யாழ்ப்பாணம்)

ஈர விழிகளுடன் ஏழாண்டு ஏங்கித் தவிக்கின்றோம்
எங்கு சென்றாலும் எங்கள் நினைவாய் இருப்பவர்
எங்களுக்காகவே வாழ்ந்து எந்தக் குறையும் இன்றி வாழவைத்தவரே
எங்களை பலமாய் தாங்கியவரே தாங்கும் கரமின்றி தவிக்கின்றோம்.
அப்பா எங்களிடம் மீண்டும் வந்துவிடுங்கள்
எக்காளம் ஒலிக்கும் இறையொலி கேட்கும்
உயிரோடு எழுந்து எங்களிடம் வந்துவிடுங்கள்
ஏக்கத்தோடு காத்திருக்கிறோம் வாருங்கள், வாருங்கள்.

இல. 200, சென் பெனடிக்ற் றோட்,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

மனைவி, மகள், மருமகன்,
பேரக்குழந்தைகள்

(CS/56065) J-1

## நெஞ்சகலா பத்தாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
03 • 12 • 1939

உதிர்வு
22 • 08 • 2014

### அமரர் செல்லையா மகேஸ்வரன்

(ஸ்தாபகர் ஜெவ்னா எலக்றிக்கல்ஸ், மகேஸ் அன் சன்ஸ்)

திதி : அபரபட்ச திரியோதசி (31.08.2024)

அன்பின் திருவுருவமே! பண்பின் உறைவிடமே!
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து பத்து ஆண்டுகளல்ல
எத்தனை ஆண்டுகள்தான் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு
என்றும் அகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

127/6, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

CR/42926) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
12 • 03 • 1949

மறைவு
30 • 08 • 2024

### சின்னத்தம்பி சிவமூர்த்தி

அச்சுவேலி வடக்கு அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவமூர்த்தி அவர்கள் நேற்று (30.08.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் சுஜாதா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி, நடேசமூர்த்தி, தனலட்சுமி, வரலட்சுமி, மற்றும் ராசலட்சுமி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சிவாஜா மற்றும் அஜந்தன் (சிங்கர் முகாமையாளர் யாழ்ப்பாணம்), அகிலன் (சிங்கர் முகாமையாளர் கொடிகாமம்), சிந்துஜா (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும், செ.றஞ்சன் (பிரான்ஸ்), அ.மீராஜினி (பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்), அ.மஞ்சுளா (பிரதேச செயலகம் தென்மராட்சி) ஆகியோரின் மாமனாரும், அ.அஸ்விதன், அ.அனன்ஜா, அ.ஆத்விகா, ற.அஸ்வின் (பிரான்ஸ்), ற.அஷ்சறா (பிரான்ஸ்), நி.பவகீர்த்தன் (லண்டன்) ஆகியோரின் பேரனும் பொ.சாந்தாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2024) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 992 3382

(CS 42564) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல்...

சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு (ஓகஸ்ட் 30) வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையிலேயே, சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு மேலும் தெரிவித்ததாவது:-

"ஸ்ரீலங்காவில் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மீதான துன்புறுத்தல்கள் தொடர்கின்றன. பாதுகாப்புப் படையினரின் கண்காணிப்பு, மிரட்டல், பொய்யான குற்றச்சாட்டுகள், வன்முறை மற்றும் தன்னிச்சையான கைது உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலமே இந்தத் துன்புறுத்தல்கள் தொடர்கின்றன.

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி, ஓகஸ்ட் 30 ஆம் திகதி (நேற்று) திருகோணமலையில் இடம்பெற விருந்த போராட்டத்துக்கு நீதிமன்றத்தில் பொலிஸார் தடையுத்தரவைப் பெற்றுள்ளனர். நீதிமன்றமும் பொலிஸாரின் கோரிக்கைகளையும் சமர்ப்பணங்களையும் ஏற்றுக்கொண்டு தடையுத்தரவை வழங்கியுள்ளது. காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கு அவர்களின் குடும்பங்கள் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், அரச இயந்திரத்தின் ஆதரவு பெற்ற திணைக்களங்களோ அவர்களை மௌனமாக்க முயற்சி செய்கின்றன.

உலகில் அதிகளவானவர்கள் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்று. ஜே.வி.பி.யினரின் போராட்டம், விடுதலைப் புலிகளின் போராட்டம் எனப் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்தப் போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால், இதற்குப் பொறுப்பானவர்கள் அரசாங்கத்தால் இதுவரை தண்டிக்கப்படவில்லை. இதன் காரணமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் சர்வதேச விசாரணைகளுக்கு வேண்டுகோள் விடுக்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளது" - என்றுள்ளது. (அ-ம)

## புறக்கணிப்பும்...

இலங்கைக்குத் திடீர் பயணமாக வந்திருந்த அஜித் டோவல் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் சிலரைச் சந்தித்திருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், செ. கஜேந்திரன் ஆகியோர் இதில் பங்கேற்றனர். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதற்கான நியாயப்பாடுகளை விளக்கிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுள்ளார்.

அதன் பின்னர் செல்வம் அடைக்கலநாதன் இந்திய உதவிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளார். இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துமாறு கோரியுள்ளார். வடக்கு மற்றும் கிழக்கு மீனவர்களுக்கு சீனாவின் அரிசி விநியோகம் தொடர்பிலும் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் அவர் பேசவில்லை.

அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த செ.கஜேந்திரன், இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்புக்கு உட்பட்டு எந்தவொரு தீர்வும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வே பொருத்தம் என்பதையும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் மாகாண சபை தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் 32 தீர்ப்புகளின் அதிகாரம் மத்தியிடம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் 13 ஆவது திருத்தத்தால் எந்தப் பயனும் இல்லை என்பதை எடுத்துரைத்துள்ளார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன், 3 பிரதான வேட்பாளர்களுடனும் பேசுவதாகக் கூறியுள்ளார். மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுமா என்ற சாரப்பட அஜித் டோவல் இந்தச் சந்திப்பில் கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு சுமந்திரன், அது நிச்சயம் வழங்கப்படும் என்ற சாரப்பட பதில் வழங்கியுள்ளார்.

தொடர்ச்சியாகக் கருத்து வெளியிட்ட அஜித் டோவல், இந்தியாவிலும் இலங்கையைப் போன்றே மாகாண சபை முறைமை இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், தமிழ்ப் பொதுவேட்பாளர் மற்றும் தேர்தல் புறக்கணிப்பு என்பன பிரயோசனமற்றவை என்பதையும் தெரிவித்துள்ளார். முஸ்லிம்களின் மத நம்பிக்கைப்படி அவர்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொள்வது கிடையாது. ஆனால் இன்று உலகெங்கிலும் முஸ்லிம்கள் ஜனநாயகத்தைப் பின்பற்றி தங்கள் உரிமைகளைப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அதைப்போல தமிழ் மக்களும், தேர்தலில் வாக்களிக்க வேண்டும் எனவும், வெற்றி வேட்பாளரை ஓரணியாக தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-5)

## குடும்பப்பெண்...

வவுனியா, கொக்குவெளி, அரசடி வீதியில் வசித்து வந்த குடும்பப்பெண் ஒருவரை யாழ்ப்பாணத்தில் இருந்து வாகனம் ஒன்றில் வந்த குழுவினர் கடத்திச் சென்றுள்ளனர். வீட்டில் இருந்த பெண்ணின் மாமியார் பெண்ணை தூக்கிச் சென்றவர்களை விரட்டிய போது அவரை உதைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

இதையடுத்து, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, விரைந்து செயற்பட்ட பொலிஸார் குறித்த வாகனம் சென்ற பாதையை பின் தொடர்ந்து சென்று பளைப் பகுதியில் வைத்து வாகனத்தை மடக்கிப் பிடித்ததுடன், பெண்ணையும் மீட்டுள்ளனர்.

மணியந்தோட்டம், இருபாலை, சுன்னாகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நான்கு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-ம-18-110)

## பெண்...

இடம்பெற்றுள்ளது. கடன் கொடுத்தவர்கள் அதைத் திருப்பிக் கேட்டு கண்டபடி திட்டியதையடுத்தே அவர், தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## உறவுகளுக்காகப்...

திருகோணமலைப் பகுதியில் ஓர் ஆர்ப்பாட்ட நிகழ்வு இடம்பெறவுள்ளது. அந்த ஆர்ப்பாட்டத்தால் சமாதானத்துக்குப் பங்கமும், பாதுகாப்புக்கு அச்சுறுத்தலும், இனங்களுக்கிடையே முறுகலும் ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளதால், ஆர்ப்பாட்டத்துக்குத் தடை விதிக்க வேண்டும் எனப் பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் தடையுத்தரவைப் பிறப்பித்தது.

அரசமைப்பில் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற பேச்சுரிமை, கருத்துரிமை, ஒன்றுகூடும் சுதந்திரம் என்பன மழுங்கடிக்கப்படாமல் இருக்கின்ற வகையில் இந்தத் தடையுத்தரவு இருக்கவேண்டும் என்பதில் நீதிமன்றம் கவனமாக இருக்கின்றது. எனினும், ஆர்ப்பாட்டத்தால் இனங்களுக்கு இடையில் அச்சுறுத்தலும் பதற்றமும் ஏற்படுகின்றபோது அதைத் தடைசெய்கின்ற வகையில் நீதிமன்றம் இந்தத் தடைக்கட்டளையைப் பிறப்பிக்கின்றது என்று நீதிமன்றின் உத்தரவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம)

## 45ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
17 . 07 . 1913



மறைவு
20 . 08 . 1979

### அமரர் கார்த்திகேசு வைத்தியலிங்கம்

(உரிமையாளர் - வைத்தியலிங்கம் மரக்காலை - யாழ்ப்பாணம்)

**(திதி : ஆவணி மாத தேய்பிறை திரயோதசி திதி - 31.08.2024)**

காலக் கடலையில் கரைந்து மறைந்தனையோ?
காதல் மனைமக்கள் சுற்றம் மறந்தனையோ?
ஞாலத் தெமையணைந்த நல்ல உளத்தையெந்த
நாளில் இனிக்காண்போம்? வாழ்வில் அழுகின்றோம்!
திரயோதசி திதியாம் பிரதோஷ நன்னாளில்
கைலாயப் பெருமானின் பாதக்கமலம் சென்றடைந்தனையோ…!

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

என்றும் உங்கள் நினைவுகளோடு
அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இல.110, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காணாமலாக்கப்...

**யாழ்ப்பாணத்தில்**

காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி யாழ்ப்பாணத்தில் பெருமளவான மக்கள் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர். யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் மு.ப. 11 மணியளவில் ஆரம்பமான பேரணி பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, காங்கேசன்துறை வீதி ஊடாக முனியப்பர்கோவிலடியை அடைந்தது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது வெளிப்படுத்தப்படவேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள். பேரணியில் கலந்துகொண்ட தாய்மார்கள், தீச்சட்டியை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**யாழ்ப்பாணப் பல்கலை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவும் காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரிய போராட்டங்கள் இடம்பெற்றன. கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறும், வாயை கறுப்புத் துணியால் கட்டியவாறும் அவர்கள் தங்களின் போராட்டத்தை முன்னெடுத்தனர். மாணவர்களுடன், விரிவுரையாளர்கள், கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சிலரும் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

**கிளிநொச்சியில்**

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாகவும் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பித்த பேரணி கிளிநொச்சி மீனாட்சி அம்மன் ஆலயம் வரை சென்று அங்கு காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக சிதறு தேங்காய் உடைக்கப்பட்டு வழிபாடும் மேற்கொள்ளப்பட்டது. ஸ்ரீலங்காவின் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் சர்வதேசம் உடனடியாகத் தலையிடவேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

**வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்**

காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மதகுருக்கள், துறவிகள் எனப் பலநூறு பேர் இந்தப் போராட்டங்களில் கலந்துகொண்டனர். (அ-ம-26-27-20-66)

## தமிழ்ப்...

கூடியது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் உபதலைவரும், வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சருமான தம்பிராசா குருகுலராஜாவின் தலைமையில், மாவட்டக் கிளை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்களின் பங்கேற்போடு நடைபெற்ற இந்தக் கூட்டத்திலேயே, ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக் கட்சி தமிழ்ப் பொதுவேட்பாளருக்கே ஆதரவளிக்க வேண்டும் என்று தீர்மானித்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

**கடிதமும் அனுப்பிவைப்பு**

மத்திய செயற்குழுவுக்குச் சமர்ப்பிக்கும் பொருட்டு, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவிடம் வழங்குவதற்காக, கிளிநொச்சிக் கிளையினரால் அறிக்கையொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:-

“இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 9ஆவது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில், உள்நாட்டு தமிழ் வாக்காளர்களிடையேயும், புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் மக்கள் மத்தியிலும், அரசியற் கட்சிகளுக்குள்ளும் எழுந்துள்ள பல்வேறு வாதப் பிரதிவாதங்களை ஆழமாகவும், விசாலமாகவும் கருத்தூன்றி ஆராய்ந்து, பொருத்தமான தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டிய நிலைக்கு காலம் எம்மை நிர்ப்பந்தித்திருக்கிறது.

இதனடிப்படையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினராகிய நாங்கள், கட்சியினுடைய இணக்க விதிகளுக்கு உட்பட்டு, மாவட்டத்தின் பல்வேறு தரப்பினருடனும், சிவில் சமூகம் மற்றும் மதகுருமார்களுடனும், பொதுமக்களுடனும் அவ்வப்போது கலந்துரையாடி பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில், 2024 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டக் கிளையாக ஒன்றிணைந்து, ஏகமனதாக எடுத்த கீழ்வரும் தீர்மானத்தை, மத்திய செயற்குழுவின் தழுவு அனுமதிக்காக தயவுடன் முன்னளிப்புச் செய்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்ற நிலைப்பாட்டை பொறுப்போடு ஆராய்ந்து, நிகழ்கால இலங்கையினுடைய ஆட்புல ஒருமைப்பாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில், தமிழ் மக்களினுடைய இனத்தேசிய அடிப்படையில் நின்று பொருத்தமான உபாயம் ஒன்றை நாம் சிந்திப்பது காலத் தேவையானது என்று நம்புகின்றோம்.

போருக்குப் பிந்திய 15 ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில், எதிர்பார்க்கப்பட்ட நற்பலன்களை விட பிரதிகூலமான வெளிப்பாடுகளையே தமிழ்மக்கள் அனுபவிக்க நேர்ந்திருக்கிறது என்பது கசப்பானது. எனினும் அதுவே உண்மையானது ஆகும். போர் ஒன்றின் பின்னராக தோல்வியடைந்த மனநிலையில் விடப்பட்ட தமிழ்ச்சமூகத்தை அதிலிருந்து மீட்டெடுக்கும் பணியையே எமது அரசியல் இயக்கம் பிரதான பணியாகக் கொண்டிருந்தது. எனினும் உள்நாட்டுக்கு உள்ளேயும், சர்வதேச சமூகத்தோடு இணைந்தும், எமது இராஜதந்திர, புத்திபூர்வமான அணுகுமுறைகள் ஊடாகவும் எமது மக்களின் வலிகளுக்கு நிவாரணம் வழங்கவோ, அவர்களது நம்பிக்கையைக் கட்டியெழுப்பவோ இயலாதிருந்திருக்கின்றோம் என்பதை பொறுப்புடன் ஏற்றுக்கொள்ளுகின்ற சந்தர்ப்பம் ஒன்றை இந்தத் தேர்தல் எங்களுக்குத் தந்திருக்கின்றது.

கூருணர்வு மிக்க அரசியல் திறன், அணுகுமுறை மற்றும் சர்வதேச சமூகத்தின் வாஞ்சையைப் பெற்றுக்கொள்ளல் என்பதில் நிலைதளர்ந்து போயுள்ள சூழல் குறித்துதமிழ்த்தேசிய ஆர்வலர்களிடமும், அறிவுஜீவிகளிடமும், சாதாரண பொதுமக்களிடமும் எதிர்காலம் பற்றிய ஐயுறுநிலை அதிகம் வளர்ந்துள்ளமையை மக்கள் பிரதிபலித்து வருகிறார்கள் என்பதை எம்மால் உணர முடிகிறது.

மேற்படி இக்கட்டான சந்தர்ப்பம் ஒன்றில் போரின்போதும், போருக்குப் பின்னரும் நிகழ்ந்துவரும் இழப்புகளுக்கு பரிகாரம் காணவும், சர்வதேச அணுகுமுறைகளில் விருத்தியை ஏற்படுத்தவும், ஜெனிவாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானங்களை வலுப்படுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிலைமாறுகால நீதிச் செயற்பாட்டை வழிப்படுத்தவும், மீள நிகழாமையை வலியுறுத்தி தாயகத்தில் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றைக் கோரவும் முன்னகர்ந்து செல்லவேண்டிய தலைமைத்துவத்தை எமது மக்கள் எதிர்பார்த்து இருக்கின்றார்கள்.

அறிவுபூர்வமானது என்று நம்பப்படும் கருத்தியல்களுக்கும், எமது மக்களினுடைய உணர்வு நிலைகளுக்கும் இடையிலான போராட்டமாக இந்தத் தேர்தல்களம் விரிந்துள்ளமையால், மக்கள் எது சாத்தியம் என்று நம்புகின்றார்களோ, அவற்றைக் கவனமாக ஆராய்ந்து, தமிழ்த்தேசிய உணர்வுத் தளத்துடன் இணைந்த தீர்மானம் ஒன்றை, அதன் உயிர்நாடியாக விளங்குகின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்க்கமான முறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே பெரும்பான்மைத் தமிழ் மக்களுடைய கருத்துநிலையாக உள்ளது என்பதைத் தங்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம்.

மேற்படி விடயங்கள் ஒவ்வொன்றையும் மக்கள் மத்தியிலும், அரசியல் ஆர்வலர்கள் மத்தியிலும் பொதுசன அபிப்பிராயமாகப் பெற்று எமது மாவட்டக் கிளையும், பிரதேசக் கிளைகளும், உள்ளூராட்சி மற்றும் மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களும் இணைந்து, கள யதார்த்தத்தின் அடிப்படையில் இலங்கைத்தமிழரசுக் கட்சியினுடைய கொள்கை நிலைப்பாட்டைப் பாதுகாத்து, மக்கள் மத்தியில் எமது அரசியல் இயக்கம் நெருங்கிச் செயற்படும் வகையில் தாயகத்தின் சிவில் அமைப்புகளினாலும், தமிழ்த்தேசியப் பரப்பிலுள்ள பெரும்பான்மைக் கட்சிகளினாலும் முன்மொழியப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்கவேண்டுமென்ற ஏகமனதான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம் என்பதை தங்களுக்குத் தயவுடன் அறியத்தருகிறோம்” - என்றுள்ளது. (அ-ம-113)

## சிங்கள...

என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதிவேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கடந்த காலத்தில் எமது நாட்டில் இனவாத அரசியலே நிலவியது. தெற்கில் முற்றாகவே சிங்கள இனவாதமே வெற்றிபெறுகின்றது. அதற்கு மாறாக கிழக்கில் முஸ்லிம் இனவாதம் மேலோங்குகின்றது. அதைப்போலவே வடக்கிலும் தமிழ் இனவாதம் கட்டிவளர்க்கப்படுகின்றது. மக்கள் மத்தியில் இனவாதம் இல்லாவிட்டாலும் ஒரு இனவாதத்தால் மற்றுமொரு இனவாதத்தைக் கட்டிவளர்க்கக்கூடிய அரசியலை முன்னெடுத்துவர அரசியல்வாதிகள் முயற்சிசெய்தார்கள்.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித்த தேர்தலில் கோத்தாபய வெற்றிபெற்றமைக்கான பிரதான காரணம் இனவாதமாகும். 2015ஆம் ஆண்டில் தோல்வி கண்ட ராஜபக்சக்கள் மீளவும் எழுச்சி பெற்றது ஜனநாயகம், தேசிய ஒற்றுமை போன்ற விடயங்களின் அடிப்படையிலல்ல. இவர்கள் அரச அனுசரணையுடன் முஸ்லிம் மக்களுக்கு எதிரான அரசியல் கருத்திட்டமொன்றை ஆரம்பித்தார்கள்.

மலட்டுக் கொத்து, மலட்டு உடைகள், மலட்டு மருத்துவர்கள் என்று இனவாதத் தீயை மூட்டிய பின்னர் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை நடாத்தினார்கள். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை மேற்கொண்ட தினத்திலேயே கோத்தாபய வெற்றிபெறுவது உறுதியாயிற்று. அதற்கான காரணம் இனவாதமாகும்.

கொவிட் பெருந்தொற்றால் மனிதர்கள் இறந்தால் ஏனைய நாடுகளில் நல்லடக்கம் மற்றும் தகனம்செய்தல் ஆகிய இரண்டையுமே மேற்கொண்டவேளையில் இலங்கை அரசாங்கம் மாத்திரம் தகனம் செய்யவேண்டுமென்ற முடிவை எடுத்தது. ஏனெனில், இனவாதத்தின் அடிப்படையில் அமைக்கின்ற அரசாங்கம் இனவாதத்தின் அடிப்படையிலேயே செயலாற்றும். அதனால்தான் இனவாதத்துக்குக் கட்டுப்படாததும், இனவாதத்தை நிகழ்ச்சி நிரலில் கொண்டிராததுமான அரசாங்கமொன்றை அமைத்திட வேண்டும்.

முஸ்லிம் விரோத அரசாங்கத்தில் இருந்தவர்கள் தற்போது ரணில், சஜித், நாமலுடன் மூன்றாகப் பிரிந்துள்ளனர். சஜித் பிரேமதாஸ கிழக்குக்கு வரும்போது சம்பிக்க ரணவக்கவை ஒளித்துவைத்துவிட்டு ஹக்கீமோடு வருகிறார். ஆனால் தெற்கிற்குப்போவது சம்பிக்கவுடனேயே. மாத்தறைக்கு ஹக்கீம் அல்லது ரிஷாட்டுடன் போவதில்லை. சம்பிக்க, திலங்க, கொடஹேவா போன்றவர்களுடனேயே அங்கு போகிறார். இது இரட்டைவேடமல்லவா? மகரகம இனவாத மேடையில் சம்பிக்கவும் திலங்கவும் ஒரே மேடையில் இருந்தார்கள். அவர்கள் இருவருமே தற்போது சஜித்தின் மேடையில்.

வரலாற்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இனவாத அரசியலைச்சுமந்துசென்றவர்கள் இப்போது மூன்றாகப் பிரிந்துள்ளார்கள். வரலாற்றில் ஒருபோதுமே இனவாதத்தை தமது அரசியலுக்காகப் பாவித்திராத ஒரே இயக்கம் தேசிய மக்கள் சக்தி மாத்திரமாகும். நீங்கள் உண்மையாகவே இனவாதத்துக்கு எதிரானவர்களெனில் தேசிய மக்கள் சக்தியை மாத்திரமே தெரிவுசெய்துகொள்ளவேண்டும். இனவாதத்துக்கு எதிரானவர்களெனில் சஜித்துக்கோ, ரணிலுக்கோ புள்ளடியிட வேண்டாம். இனவாதத்துக்கு எதிரான தேசிய ஒற்றுமைக்கான அரசாங்கம் தேவையென்றால் தேசிய மக்கள் சக்திக்கு மாத்திரமே புள்ளடியிடவேண்டும்” - என்றார். (அ-ஒ-இ)

## யாழில்...

பட்ட உள்ளகச் சந்திப்புகளில் சஜித் ஈடுபடவுள்ளார். இன்று சர்வமதத் தலைவர்கள் உள்ளிட்ட சிலரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ள சஜித், நாளையதினம் ஊடகப் பிரதானிகளுடனும் சந்திப்பில் ஈடுபடவுள்ளார். யாழ்ப்பாணத்துக்கான இந்தப் பயணத்தின்போது, சஜித் றக்கா வீதியில் இடம்பெறவுள்ள தேர்தல் பரப்புரையில் கலந்துகொள்ளப்போவதாக உதயனின் நேற்றைய பதிப்பில் செய்தி வெளியாகியிருந்தது. ஆனால், இம்முறை அவ்வாறான தேர்தல் பரப்புரைகள் இடம்பெறவில்லை என்றும், சஜித்தின் பிரதான பரப்புரை நடவடிக்கைகள் செப்ரெம்பர் மாதத்தில் மத்திய பகுதியிலேயே இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

நேற்று மாலை இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. மன்னாரில் இருந்து வவுனியா நோக்கி வந்த கூலர் ரக வாகனமும், வவுனியாவில் இருந்து மன்னார் நோக்கிச் சென்ற மோட்டர் சைக்கிளும் பூவரசன்குளம், குருக்கள்புதுக்குளம் பகுதியில் பயணித்தபோது இந்த விபத்துச் சம்பவித்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பரமனாத் சிவாகரன் (வயது -30) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். இன்னொரு இளைஞர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பாக பூவரசன் குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ம-110-18)

## தடையுத்தரவுகளை...

கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் ஏற்பாட்டில், இந்தப் போராட்டங்கள் இடம்பெற்றன. கிழக்குமாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், மதகுருமார்கள் உட்பட பெருமளவிலானவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம)



## பூங்கா திறப்பு!

*கிளிநொச்சி, ஓக.31*

கிளிநொச்சி பொது மக்கள் பொழுது போக்கு மையம் கிளிநொச்சி டிப்போ சந்தியிலுள்ள இராணுவ நினைவுத்தூபி அமைந்துள்ள வளாகத்தில் இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. குறித்த பூங்காவில் இலவச இணைய வசதிகளுடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. (ரி-27)



பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த இரதோற்சவத் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-45,27,66)

## குருதிக்கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 31

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகரசபையின் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் இன்று மாலை 4 மணிமுதல் குருதிக்கொடை இடம்பெறவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு ஆலயத்தின் பூங்காவனத் திருவிழா வரை இடம்பெறவுள்ளது.

(ம-22,66)

## காரைநகரில் இன்று பண்பாட்டுப் பெருவிழா!

யாழ்ப்பாணம், ஓக. 31

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் காரைநகர் சமூக மட்ட அமைப்புக்களின் அனுசரணையுடன் காரைநகர் பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா காரைநகர் பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவையின் தலைவருமான செல்வி ந.ரஞ்சனா தலைமையில் காரைநகர் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் இ.இளங்கோவன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(ம-22,66)

## குடமுழுக்கு

கிளிநொச்சி, ஓக.31

யாழ்.கிளிநொச்சி, பளை, புலோப்பளை அறத்தியம்பதி கண்ணகை அம்மன் தேவஸ்தான நவகுண்ட பட்ஷ மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம் பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை மற்றும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது. (ச-45)


### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை பிரதான காபட் வீதியுடன் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- 6 பரப்பாக பிரித்தும் கொடுக்கப்படும்.
- ஊர்காவற்துறை வைத்தியசாலை 5 நிமிடம்
- எந்த ஒரு வியாபார நோக்கத்துக்கும் சிறந்த காணி

தொடர்புகளுக்கு:

074 260 0617, 070 575 8086,
077 612 2971

### காணி விற்பனைக்கு

கைதடி - நவபுரம் வீதி முகப்புடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட 5 காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு. ஆவணங்கள் அனைத்தும் சட்டரீதியாக 100% சரியாக உள்ளன.

- நன்னீர் வசதி உண்டு.
- மின்சார வசதி உண்டு.
- சிறந்த சுற்றுச் சூழல்.
- 1 பரப்பு - 8 லட்சம் ரூபா.

மேலதிக விபரங்களுக்கு :-

076 659 0583, 077 612 2971

(CS 56070) A-1

### காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில்
112 பரப்புக் காணியில் 06 பரப்பு
காணி மட்டுமே விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் (2 வது காணி).
- 20 அடிப்பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- ஒரு பரப்பின் விலை 5 1/2 இலட்சம் (550000/=)
- தரகர் தேவையில்லை

**பார்வையிடும் நேரம்:**

காலை 6 மணி தொடக்கம் மாலை
6 மணி வரை.

தொடர்புகளுக்கு:

ஜெயம் { 077 814 7389
077 986 5457

(CS 1241) V-1

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ். மாநகர சபை எல்லைக்குள் 2 பரப்புக் காணி 4 பக்க சுற்று மதில் மற்றும் பொலிகல்லு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
குடியிருப்புக்கு மிகவும் கௌரவமானதும், பிரபல்யதுமான இடம் என்பது குறிப்பிடத்தக்கது.

T.P- 077 992 1536

(CS/1234) J-1

### Win Repair

குளிர் சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள் உங்கள் இடத்திற்கு வந்து திருத்தித்தரப்படும்.

தொடர்பு: 076 834 6136

### விற்பனைக்கு

Bajaj Discover - 150
Motor Bike மற்றும்
40 வருட மலைவேம்பு மரம்
என்பன விற்பனைக்கு உண்டு.

T.P - 077 959 9022

(CS/1226) J-1

### வீடு வாடகைக்குண்டு

அருளம்பலம் வீதி, அரியாலையில் நவீன வசதிகளுடன் கூடிய மாடி வீட்டின் மேற்பகுதி மட்டும் வாடகைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு

இடைத்தரகர்கள் அனுமதி இல்லை

தொடர்புகளுக்கு:

074 216 8717, 074 223 6815

### வாடகைக்கு

பல்கலைக்கழக வீதி,
திருநெல்வேலியில் அமைந்துள்ள ஒரு வரவேற்பறை, 3 அறைகள், சமையலறை, கறாச் மற்றும் வாகனத்தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு.
முற்பணம் - 300 000/-
வாடகைப்பணம் - 30 000/-

தொடர்பு:- 077 112 2569

(CS/56067) J-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.08. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.